**பதவி வெற்றிடங்கள்**

## கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

## சமூக சேவைகள் திணைக்களம்

# சைகை மொழிபெயர்ப்பாளர் (தரம் III)

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்கள், பாதுகாப்பு நிலையங்கள் மற்றும் திறன் விருத்தி பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களில், 12 சைகை மொழிபெயர்ப்பாளர் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களினை பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 02 வது மாடி, கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2026.10.09 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் வருகை தந்தோ சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், சைகை மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.socialservices.gov.lk என்ற இணையதளத்தினூடாக மாதிரிப் படிவங்கள் மற்றும் விபரங்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் உத்தியோகத்தர்கள் பின்வரும் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**1. பதவி வெற்றிடங்கள் நிலவும் நிலையங்கள் - 12**

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் | - 01 |
| தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனம் | - 01 |
| கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனம் | - 01 |
| மாதம்பே வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனம் | - 01 |
| கலவான வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனம் | - 01 |
| மொனராகலை மாவட்டச் செயலகம் | - 01 |
| நுவரெலியா மாவட்டச் செயலகம் | - 01 |
| இரத்தினபுரி மாவட்டச் செயலகம் | - 01 |
| திருகோணமலை மாவட்டச் செயலகம் | - 01 |
| அம்பாறை மாவட்டச் செயலகம் | - 01 |
| யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் | - 01 |
| குருநாகல் மாவட்டச் செயலகம் | - 01 |

**1.1 திறந்த ஆட்சேர்ப்பு**

**1.1.1 வயது வரையறை :-**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் மற்றும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**1.1.2 கல்வித் தகைமைகள் :-**

(அ) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன், ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) க.பொ.த. (உ./த) பரீட்சையில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) ஒரே தடைவையில் சித்திபெற்றிருத்தல் (பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களிலும் ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல் போதுமானது)

**1.1.3 தொழிற் தகைமைகள் :-**

தேசியக் கல்வி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒருவருட சைகை மொழிபெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழிபெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருடத்திற்கும் குறையாத சைகை மொழிபெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழ்.

**1.1.4. அனுபவம் :-**

தொடர்பற்றது.

**1.1.5. உடற் தகுதிகள் :-**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**1.1.6. பிற :-**

i. இலங்கைப் பிரஜையொருவராக இருத்தல்.

ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்.

iii. பதவியொன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளினையும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் / வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினத்தன்று எல்லாவகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**1.1.7.ஆட்சேர்ப்பு முறைமை :-**

எழுத்து மூல மற்றும் தொழில்முறைப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**1.1.7.1எழுத்து மூலப் பரீட்சை :-**

| பாடங்கள் | நேரம் | ஆகக்கூடிய புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளிகள் |
|---|---|---|---|
| உளச்சார்பு பரீட்சை | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழித்திறன் | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |

**1.1.7.2 தொழில்முறைப் பரீட்சை :-** சைகை மொழியின் நடைமுறை அறிவினைப் பரிசோதித்தல்.

| பாடங்கள் | நேரம் | ஆகக்கூடிய புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளிகள் |
|---|---|---|---|
| சைகை மொழியின் நடைமுறை அறிவினைப் பரிசோதித்தல் | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |

**1.1.8 பொதுவான நேர்முகப் பரீட்சை :-**

பதவிக்குத் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்ப்பதற்குச் சான்றிதழினைப் பரிசோதித்தல் (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

**1.1.9. சம்பள அளவுத் திட்டம் :-**

பொ.நி.சு.10/2025 இன் பிராகரம் MN 02 -2025

சம்பள அளவு ரூ. 48,470-10 X 540-11 X 630-10 X 1,010-10 X 1,190-82,800/- ஆகும்.

(இச் சம்பள அளவு 2027.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.)

**1.1.10 குறிப்பு**

எழுத்துமூல மற்றும் தொழில்முறைப் பரீட்சையொன்றினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களிலிருந்து இருமடங்கினர் தொழில்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், அவ்வேளையில் பொதுவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். பொதுவான நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களினுள் எழுத்து மூல மற்றும் தொழில்முறைப் பரீட்சை இரண்டிலும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறன் ஒழுங்குமுறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**1.1.11.சேவை நிபந்தனைகள் :-**

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது, ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியப் பங்களிப்புக்களினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 18.'.2020 மற்றும் அதனுடன் தொடர்பிலான சுற்றுநிருபங்களின் பிரகாரம் மூன்று வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**1.1 வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு**

**1.2.1 கல்வித்தகைமைகள் :-**

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாதவாறு இரண்டு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

**1.2.2 தொழிற் தகைமைகள்:-**

தேசியக் கல்வி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒருவருட சைகை மொழிபெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழ்

அல்லது

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழிபெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழ்

அல்லது

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருடத்திற்கும் குறையாத சைகை மொழிபெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழ்.

**1.2.3 அனுபவம்:-**

சமூக சேவைகள் திணைக்களத்தில் பராமரிப்பாளர் அல்லது விடுதிக் காப்பாளர் பதவியொன்றில் 05 வருடத்திற்கும் குறையாது செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலப்பகுதியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

**1.2.4. உடற் தகுதிகள் -**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும்,பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**1.2.5. பிற**

i. நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.

ii. தகைமைகள் பூர்த்தி செய்யப்படவேண்டிய திகதிக்கு முன்னரான ஐந்து (05) வருடக் காலப்பகுதியினுள் திருப்திகரமான சேவைக் காலப்பகுதியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

iii. பதவியொன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளினையும், விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் / வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினத்தன்று எல்லா வகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்.

**1.2.6. வயது :-** தொடர்பற்றது.

**1.2.7. ஆட்சேர்ப்பு முறைமை :-**

எழுத்து மூல மற்றும் தொழில்முறைப் பரீட்சையொன்றினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**1.2.7.1.எழுத்து மூலப் பரீட்சை**

| பாடங்கள் | நேரம் | ஆகக்கூடிய புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளிகள் |
|---|---|---|---|
| உளச்சார்பு பரீட்சை | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழித்திறன் | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |

**1.2.7.2. தொழில்முறைப் பரீட்சை**

| பாடங்கள் | நேரம் | ஆகக்கூடிய புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளிகள் |
|---|---|---|---|
| சைகை மொழியின் நடைமுறை அறிவினைப் பரிசோதித்தல். | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |

**1.2.8 பொதுவான நேர்முகப் பரீட்சை**

பதவிக்குத் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்ப்பதற்குச் சான்றிதழினைப் பரிசோதித்தல் (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

**1.2.9. குறிப்பு**

எழுத்துமூல மற்றும் தொழில்முறைப் பரீட்சையொன்றினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களிலிருந்து இருமடங்கினர் தொழில்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், அவ்வேளையில் பொதுவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். பொதுவான நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களினுள் எழுத்து மூல மற்றும் தொழில்முறைப் பரீட்சை இரண்டிலும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறன் ஒழுங்குமுறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**1.2.10. சேவை நிபந்தனைகள்**

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது, மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / விதவைகள், தபுராரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினூடாக அவ்வப்போது விதிக்கப்படும் முறைமைக்கிணங்க தங்களினால் அது தொடர்பில் பங்களிப்பு நிதி செலுத்தப்படுதல் வேண்டும். பொ.நி.சு. 18/2020 மற்றும் அதனுடன் தொடர்பிலான சுற்றுநிருபங்களின் பிரகாரம் மூன்று வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**1.2.11. குறிப்பு**

மேற்குறிப்பிட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஐந்து வருடங்கள் கட்டாயமாகக் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.

**தர்சனீ கருணாரத்ன,**
**சமூக சேவைகள் பணிப்பாளர்.**

**சமூக சேவைகள் திணைக்களம்,**
**2 வது மாடி,**
**II வது கட்டம்,**
**செத்சிறிபாய, பத்தரமுல்ல.**
**2026.09.17**